**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை– 641 003.**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 10.12.2025**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 26°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 25°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 08°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது.

**1. மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 32°செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 20°செ முதல் 21°செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40-60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10-14 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் காற்று வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலையுடன் காற்றானது மணிக்கு 8-14 கிமீ வரையிலும் வீசக்கூடும்.
- நெல்லில் நிலவும் வானிலையில் புகையான் வருவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது. எனவே ஒரு எக்டருக்கு இமிடாகுளோபிரிட் 100-125 மிலி மருந்தினை மழையில்லா நாட்களில் தெளிக்கவும்.
- நெல்லில் குலை நோய் தாக்கம் தென்படின் அசாக்ஸிஸ்ட்ரோபின் 23% SC @ 1 மில்லி / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும்.
- பருத்தியில் ஏக்கருக்கு 2.5. கிலோ என்ற அளவில் TNAU பருத்தி பிளஸ் தெளிப்பதன் மூலம் பூ மற்றும் சப்பைகள் உதிர்வது குறையும். காய்கள் முழுமையாக வெடித்து, சீரான அறுவடைக்கு வழி வகுக்கிறது.
- நிலவும் வானிலையில் இறவை மரவள்ளி கிழங்கிற்கு மேலுரமாக 40 கிலோ தழைச்சத்து மற்றும் 120 கிலோ சாம்பல் சத்து இட்டு, மண் அணைத்து நீர் பாய்ச்சவும்.
- கொடி வகை பயிர்களில் பந்தல் காய்களில் பழ ஈ நிகழ்வுக்கு காணப்பட்டால் பாதிக்கப்பட்ட மற்றும் உதிர்ந்த பழங்கள் ஆழமான குழிகளில் போட்டு மூடவும். மேலும், கட்டுப்படுத்த மாலத்தியான் 1மிலி/லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- பழ ஈ தாக்குதலை மேலாண்மை செய்ய மெத்தைல் யூஜினால் பொறியை ஏக்கருக்கு 10 என்ற அளவில் வைக்கவும்.
- காய்கறி பயிர்களுக்கு நுண்ணூட்டம் உரமிடுதல் நல்ல பயனளிக்கும். பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள காய்கறி பயிர்களுக்கு நுண்ணூட்டத்தை நீர் பாசனம் வழி விடுதல் அல்லது இலைவழியாக தெளிக்கவும்.
- மஞ்சளில் கிழங்கு அழுகல் நோய் தாக்கம் தென்பட்டால் 0.25% காப்பர் ஆக்ஸிலக்ளோரைடு கொண்டு நோய் பாதிப்பு காணப்படும் பகுதிகளில் நனைக்க வேண்டும்.

- தென்னை மரத்திற்கு இரண்டாவது முறையாக யூரியா 650 கிராம் + சூப்பர் பாஸ்போட் 1 கிலோ + மீயூரிட்டா பொட்டாஸ் 1 கிலோ கலந்து 50 கிலோ மக்கிய எருவுடன் இடுவதற்கு இதுவே தகுந்த தருணமாகும்.
- கால்நடைகளுக்கு நீரினால் பரவும் தொற்றுகளைத் தவிர்க்க, கால்நடை கொட்டகைகள் மற்றும் அருகிலுள்ள பகுதிகளை பெனாலிக் சேர்மங்கள் அல்லது குவாட்டர்னரி அமோனியம் சேர்மங்களை கொண்ட கிருமி நாசினிகளை பயன்படுத்தி சுத்தம் செய்யவும்.

## 2. காவிரி டெல்டா மண்டலம்

காவிரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 10.12.2025 முதல் 14.12.2025 ஆகிய தினங்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 27 - 30°செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 21 - 23°செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 40-60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10 - 18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் கிழக்கு வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- நெல்லில் மழை இல்லாத பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ள வயல்களில் வடிகால் வசதியை அதிகப்படுத்தி, பயிர் மூழ்காதவாறு தேங்கியுள்ள நீரை வெளியேற்ற வேண்டும்.
- தேங்கியுள்ள நீரை வடித்தவுடன் வரிசை நடவு மேற்கொண்டுள்ள வயல்களில் கோனோவீடர் கருவி மூலம் மண்ணில் காற்றோட்டத்தை ஏற்படுத்த வேண்டும்.
- வளர்ச்சி சரியில்லாத இடங்களில் வளர்ச்சியை மேம்படுத்த ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவுடன் 18 கிலோ ஜிப்சம் மற்றும் 4 கிலோ வேப்பம்பிண்ணாக்கு கலந்து 1 நாள் இரவு வைத்திருந்து அதனுடன் 17 கிலோ பொட்டாஷ் கலந்த வயலில் தூவவேண்டும்.
- மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளில் பூஞ்சாணம் மற்றும் பாக்டீரியாவால் பயிர் அழுகல் ஏற்படவ வாய்ப்புள்ளதால் ஏக்கருக்கு 100 கிராம் கார்பன்டசிம் அல்லது 200 கிராம் டிரைக்கோசோல் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் நீரில் கலந்து கைதெளிப்பான் கொண்டு தெளிக்கவும்.
- தற்போது நிலவும் வானிலையின் காரணமாக கால்நடை தொழுவத்திலும் அதன் சுற்றியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தேங்குவதை தவிர்த்து வடிகால் வசதி ஏற்படுத்தவும். தீவன பொருட்களை மழை நீரில் நனையாமல் பாதுகாக்கவும். வெளிப்புற ஓட்டுண்ணிகளை தவிர்க்க தேங்கி நிர்க்கும் மழை நீரை கால்நடைகள் குடிப்பதை தவிர்க்கவும்

## 3. தெற்குமண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 27-31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20-24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40-60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 10-14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்றும் காற்று பெரும்பாலும் கிழக்கு வடகிழக்கு திசையில் இருந்து வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

**மானாவாரி பயிர்கள்**

- பருத்தி (மொட்டு பருவத்தில்), உளுந்து (பூ பருவத்தில்) மற்றும் மக்காசோளம் (ஆண் பூ முதல் சோளக் கதிர் உருவாம் பருவத்தில்) உள்ளது ஆகையால் பள்ளங்களில் நீர் தேங்கி நிற்காமல் பாதுகாத்துக்கொள்ளவும்.

- உளுந்து பயிர் காய் பிடிக்கும் பருவத்தில் உள்ளது. பள்ளங்களில் நீர் தேங்கி நிற்காமல் பாதுகாத்துக்கொள்ளவும்.
- நிலக்கடலை விதைப்பு மேற்கொள்ளும் விவசாய்கள் வயல்களில் நீர் தேங்கி நிற்காமல் பாதுகாத்துக்கொள்ளவும்.
-

**நீர்பாசன பயிர்கள்**

- நெல் நாற்றங்காலில் உள்ளது பாசனம் செய்வதை தவிர்க்கவும்.
- வாழை அனைத்து பருவத்திலும் உள்ளது. தொடர் மழை மற்றும் அதிக வேக காற்றின் காரணமாக மரங்கள் சாய்ந்து விடாமல் இருக்க மழை நீரை வெளியெற்றி மரங்களுக்கு முட்டுகொடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்

**கால்நடை**

- தொடர் மழையால் கால்நடைநோய்பரவாமல் தடுக்ககொட்டகை சுற்றுபுறத்தில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். 12.12.2025 முதல் 14.12.2025 வரை மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்சவெப்பநிலை 25-31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19-23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40-50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 10-18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். பெரும்பாலும் காற்று வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

**நெல்**

சம்பா நெல் பயிரில் இலை மடக்குப் புழு தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த புரபனோபாஸ்50 ஏக்கருக்கு 400 மில்லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.

**பருத்தி**

பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள் முதல் உரமாக கலப்பு உரம் வைத்தல் மிகவும் நல்லது. ஒரு ஏக்கருக்கு சூப்பர்பாஸ்பேட் 150 கிலோ அமோனியம் சல்பேட் 40 கிலோ பொட்டாஷ் 35 கிலோ இவை மூன்றையும் கலந்து செடிக்கு அருகில் வைத்து மூடிவிட வேண்டும். அல்லது 150 கிலோ 20-20 உரம் 30 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை கலந்து செடிக்கு அருகில் வைத்து மண்மூடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**கத்தரி**

காய்கறிப் பயிர்களில் வேர் முடிச்சு மற்றும் மொச்சை வடிவ நூற்புழுக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. செடிகளுக்கு போதிய அளவு நீர் மற்றும் உரம் இட்டிருந்தாலும் பகல் நேரங்களில் வாடிக் காணப்படும். வேர் பகுதிகளில் வேர் முடிச்சுகள் காணப்படும். இதனை கட்டுப்படுத்த எக்டருக்கு 400 கிலோ வேப்பம் பிண்ணாக்கு இடலாம் மற்றும் கேந்தி பூப்பயிரை ஊடுபயிராக பயிர் செய்யலாம். மேலும் ஒரு எக்டருக்கு 2½ கிலோ பர்புரியோசிலியம் லில்லாசினம் என்ற உயிரினக் கலவையை 100 கிலோ தொழு உரத்துடன் கலந்து நீர் தெளித்து நிழலில் வைத்து 15 நாட்களுக்கு பிறகு காலை, மாலை நேரங்களில் வயலில் இடவேண்டும்.

**தக்காளி**

தக்காளி பயிரில் புள்ளி வாடல் நோய் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. இந்நோய் தாக்குதலால் இலைகள், தண்டு மற்றும் பழங்களில் கோடுகள் காணப்படும். சிறிய கருப்பு வட்ட புள்ளிகள் இளம் இலைகளில் தோன்றும். இலைகள் அடர் பழுப்பு நிறமாக மாறும். பழங்களில் அரை அங்குல விட்டம் அளவிற்கு பல புள்ளிகள் காணப்படும். பழுத்த பழங்களின் கழுத்துப் பகுதியில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறமாக காணப்படும். புள்ளி வாடல் வைரஸ் நோயாயனது செடிப்பேன் மூலம் பரவுகின்றது. பாதிக்கப்பட்ட செடிகளை நீக்கி அழித்துவிட வேண்டும். வேலிப் பயிர்களை வளர்க்க வேண்டும். மேலும் 5 மில்லி இமிடாகுளோப்ரைடு அல்லது ஊடுருவும் பூச்சிக் கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை தேவையான அளவு தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**அவரை**

கொடி வகைப் பயிரைத் தாக்கும் அடிச்சாம்பல் நோய் பரவலாக தென்படுகின்றது. இந்நோய் தேமல் நோயை போன்றே இளம் பச்சை நிற பகுதிகளுடன், அடர் பச்சை நிற பகுதிகள் இலையின் மேற்புறத்தில் தோன்றும். ஈரமான காலத்தின் பொழுது, இலையின் கீழ்ப்புறத்தில் மங்கிய ஊதா நிறப் பூஞ்சாண வளர்ச்சி காணப்படும். முழு இலையும் விரைவில் காய்ந்து விடும். வரப்பினை அதிக அளவு இடைவெளியும், நன்றான நீர் வடியக் கூடியதாகவும், காற்றோட்டமாகவும், வெயில் படுமாறும் தயார் செய்ய வேண்டும்.

**நிலக்கடலை**

நிலக்கடலை பயிரில் பூவை தக்க வைத்தல் மற்றும் நெற்று நிரப்புதல் தன்மையை அதிகரிக்க கடலை விதை விதைத்த 35ம் நாள் மற்றும் 45ம் நாள் ஒரு எக்டேருக்கு 5 கிலோ நிலக்கடலை ரிச்சினை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து இரண்டு தெளிப்பாக தெளிக்க வேண்டும்.

**மா**

ஒட்டு மா செடிகளை நடவு செய்ய திட்டமிடும் விவசாயிகள், மா செடிகளை நடுவதற்கு பின் வரும் முறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1. ஒரு மீட்டர் நீளம் ஒரு மீட்டர் அகலம் ஒரு மீட்டர் ஆழம் உள்ள குழிகளை செடிகள் நடுவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வெட்ட வேண்டும்.
2. பின்னர் குழி ஒன்றுக்கு 10 கிலோ தொழு உரத்துடன் மேல் மண்ணை நன்கு கலந்து குழியின் முக்கால் பாகம் வரை மூட வேண்டும்.
3. ஒட்டுச் செடிகளை குழிகளின் மத்தியில் நட வேண்டும்.

செடிகள் நடவு செய்தவுடன் உடனடியாக தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**திராட்சை**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலை மற்றும் வெப்பநிலை குறைந்து காணப்படுவதால் திராட்சை பயிரில் சாம்பல் நோய் வரவ வாய்ப்புள்ளது. விவசாயிகள் தொடர்ந்து வயலை நன்கு கண்காணிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் இதனைக் கட்டுப்படுத்த 0.3சத நனையும் கந்தகம் அல்லது கந்தகத்தூளை ஒரு எக்டருக்கு 6 முதல் 12 கிலோ என்ற அளவில் காலை நேரங்களில் தூவ/ தெளிக்க வேண்டும்.

**ஏலக்காய்**

ஏலக்காய் பயிரில் காய்ப்பேன் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் தாக்குதலின் காரணமாக பூச்சரம் குட்டையாக இருக்கும். பேன்கள் பிஞ்சுகளின் மேற்பரப்பைச் சுரண்டி சாற்றை உறிஞ்சுவதால் சொரசொரப்பான சொறி போன்று ஏற்பட்டு பிஞ்சுகள் சுருங்கிப் போய் காயின் தரம் குறைந்து காணப்படும். பூக்கள் மற்றும் பிஞ்சுகள் உதிர்ந்து விடுவதால் காய்களின் எண்ணிக்கை குறைந்து விடும். இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 5கிராம் என்ற அளவில் தையோமித்தாக்செம் மற்றும் 10மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்க வேண்டும்.

உரம் வைத்தல் மற்றும் மருந்து தெள்ளிக்கும் வேலைகளை மழை இல்லாத நாட்களில் காலை அல்லது மாலை நேரங்களில் மேற்கொள்ளவும்.

**கால்நடை**

தற்போது நிலவி வரும் குளிர்ந்த வானிலையின் காரணமாக கால்நடைகளை சூரியன் உதித்து 2 மணி நேரம் கழித்து மேச்சலுக்கு அனுப்ப வேண்டும். மாட்டு கொட்டகைகளை சுற்றி கோணி சாக்கு பை கொண்டு மறைத்து கட்டவும். கொட்டகைகளை ஈரப்பதம் இல்லாது நன்கு உலர்ந்து இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் உலர்ந்த தீவனங்கள் அல்லது பசுந்தீவனங்கள் கொடுக்கும் போது ஈரப்பதம் இல்லாமல் கொடுக்க வேண்டும். இதனால் தங்களது கால்நடைகளுக்கு பூஞ்சை தொற்று ஏற்படாது பாதுகாக்கலாம்.

## 4. மலைப்பிரதேச மண்டலம்

மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் முக்கியமாக தெளிவாக இருந்து ஒரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பில்லை என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 18-21°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 09°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 04-06 கி.மீ அளவுக்கு வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- கேரட்டில் நூற்புழு மேலாண்மைக்குஇ நடவு செய்யும் போது எக்டருக்கு 1 டன் வேப்பம் புண்ணாக்கு மண்ணில் இடவும். கடுகு செடிகளை உயிரி புகையாக்குதல் மற்றும்

வேப்பம்புண்ணாக்கு ஒரு ஹெக்டருக்கு 250 கிலோ இடுதல், பர்ப்யூரோசிலியம்லிலாசினம் @ 5 கிலோ/எக்டர் என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் இட வேண்டும்.

- குருமிளகு வாடல் நோயைக் கட்டுப்படுத்த, ஒருசெடிக்கு டிரைக்கோடெர்மா அஸ்பெரெல்லாம் / அல்லது பேசிலஸ்சப்டிலிஸ் @ 25 கிராம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு 500 கிராம் இடலாம். மழை இல்லாத நேரங்களில் இட வேண்டும்.
- பூண்டு ஊட்டச்சத்து மற்றும் நோய் மேலாண்மை பூண்டு விளைச்சலை அதிகரிக்க நடவு செய்த 30, 45 மற்றும் 60 நாட்களில் நீரில் கரையக் கூடிய நுண்ணூட்டச் சத்து கலவையை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.50 கிராம் என்ற அளவில் இடலாம். பூண்டு பயிரில் இலைப்புள்ளி / ஊதா நிற கருகல் நோய் ஏற்படுவதை நிர்வகிக்க, மான்கோசெப் @ 2 கிராம்/லி அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
- தேயிலை தேயிலையில் கொப்புள கருகல் நோய் மேலாண்மை முறைகள் பாதிக்கப்பட்ட இலைகள் மற்றும் தளிர்களை கவாத்து மூலம் நீக்கி அழிக்கவும். ஹெக்ஸகோனசோல் @ 200 மிலி + காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 210 கிராம்/ எக்டருக்கு 5 நாட்கள் இடைவெளியில் (அல்லது) காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 210 கிராம் + புரோபிகோனசோல் @ 200 மிலி/ எக்டருக்கு 10 நாட்கள் இடைவெளியில், குறிப்பாக ஜூன்- செப்டம்பர் மற்றும் அக்டோபர்- நவம்பர் மாதங்களில் தெளிக்கவும். எளிதில் நோய் பாதிக்கக் கூடிய ரகங்களை தவிர்த்து, நோய் எதிர்ப்பு ரகங்களையிரிடவும் மத்திய பூச்சிக்கொல்லி வாரியப் பரிந்துரைகள் பின் வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவும். ஹெக்ஸகோனசோல் 5% EC @ 200ml/ha (அல்லது) ப்ரோபிகோனசோல் 25% EC @ 125 - 250ml/ha (அல்லது) கார்பெண்டாசிம் 12% + மான்கோசெப் 63% WP @ 1250g/ha (அல்லது) ஹெக்ஸகோனசோல் 4% + ஜினெப் 68% WP @ 625g/ha.
- காஃபி பழத் துளைப்பான் 1. சரியான பயிர்சாகுபடி முறைகளை கையாள வேண்டும். 2. தாக்கப்பட்டகாஃபிவிதைகளை ஒரு இடத்தில்இருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லக் கூடாது. 3. பழம் சேகரிக்கும் உதவும் பைகளை பூச்சிக்கொல்லி கொண்டு புகையூட்ட வேண்டும். 4. பாதிக்கப்பட்ட பழங்களை கொதிக்கும் நீரில் 2-3 நிமிடங்கள் நனைப்பது உள்ளே உள்ள வண்டுக்களின் அனைத்து நிலைகளையும் கொல்லும். 5. காபி கொட்டைகளை உலர்த்துவது – ஈரப்பத அளவை அடிப்படையாகக் கொண்டு சேமிக்கப்பட்ட காபியில் வண்டுகள் இனப்பெருக்கம் செய்வதைத் தடுக்கலாம். (அதாவது அரபிக்காவகை - 10 சதம் ஈரப்பதம் & ரொபஸ்டா வகை - 11 சதம் ஈரப்பதம்). மேலும், அடுக்கு புனல் பொறி மற்றும் பதுங்கு குழி பொறி போன்ற பொறிகளை அமைத்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். பிவேரியா பாசியானா என்ற பூஞ்சாண உயிர்கொல்லியை தெளிப்பதன் மூலமும் இப்பூச்சியைக் கட்டுப்படுத்தலாம். இயற்கை எதிரிகளான செபலோனோமியா ஸ்டீபன்டாரிக்ஸ் மற்றும் பிமாஸ்டிகஸ் காபி போன்ற ஒட்டுண்ணிகளை வயல் வெளியில் விடுவதன் மூலம் இப்பூச்சியின் பரவல் மற்றும் எண்ணிக்கையை குறைக்கலாம்.
- இஞ்சி மென் அழுகல் மேலாண்மை போதுமான வடிகால் வசதிகளை ஏற்படுத்தலாம். நோயற்ற விதை கிழங்குகளைத் தேர்ந்தெடுத்து, விதைக் கிழங்குகளுக்கு மான்கோசெப் அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 3 கிராம்/லி அல்லது 200 பிபிஎம் ஸ்ட்ரெப்டோசைக்ளின் மூலம் 30 நிமிடங்களுக்கு விதை நேர்த்தி செய்யலாம். நோயுற்ற வயலில், பாத்திகளை காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி அல்லது போர்டாக்ஸ் கலவை @ 1%என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.

**5. வட மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் தெளிவாகக் காணப்படும் மற்றும் மாவட்டத்தில் மழைக்கு வாய்ப்பில்லை. அதிகபட்ச வெப்பநிலை 30-31$^{o}$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21-22$^{o}$செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 08-10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் காற்று வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- உளுந்து, பாசிப்பயறு மற்றும் தட்டைப்பயறு போன்ற பயறு வகைப் பயிர்களில் பூக்களின் உதிர்வைக் குறைத்து, காய்களின் எண்ணிக்கை மற்றும் 20 சதவீதம் வரை மகசூல் அதிகரிக்க **''பயறு அதிசயம்''** என்ற உட்டச்சத்துக் கலவையை ஒரு ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் ஒட்டும் திரவத்துடன் கலந்து பூ பூக்கும் பருவத்தில் இலைவழி தெளிப்பு செய்ய வேண்டும்.
- சின்ன வெங்காயப் பயிரில், மழை மற்றும் குறைந்த வெப்பநிலைக் காரணமாக **திருகல் நோய்** தென்படுகிறது. இது கொல்லேட்டோடிரைக்கம் என்னும் பூஞ்சாணத்தால் ஏற்பட்டு வேகமாக பரவக் கூடியது. எனவே விவசாயிகள் மெட்டாலாக்சில் + மேன்கோசெப் என்னும் பூஞ்சாணக்கொல்லி மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் ஒட்டும் திரவம் கலந்து இலைவழித் தெளிப்பாக 10 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிப்பதன் மூலம் இந்த நோய் பரவலைக் கட்டுப்படுத்தலாம்.
- வாழையில் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, பேரூட்டச்சத்தின் பயன்பாட்டை அதிகரிக்கவும், அதன் உற்பத்தித்திறன் 15 முதல் 20 சதவீதம் வரை அதிகரிக்கவும் **பனானா சக்தி** என்ற வாழை நுண்ணூட்டக் கலவையை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 20 கிராம் என்ற அளவில் எலுமிச்சை சாருடன் கலந்து வாழை நட்ட 3, 5 மற்றும் 7வது மாதங்களில் இலை வழி தெளிப்பு செய்ய வேண்டும். இதனால் வாழைப்பழத்தின் இனிப்புத்தன்மை அதிகரித்து அதன் தரம் மேம்படுகிறது.

**கால்நடை ஆலோசனைகள்**

- கால்நடைகள் மற்றும் கோழிகள் தீவனத்தில் மரவள்ளி பொருட்களின் பயன்பாடு தமிழ்நாட்டில் **நாமக்கல், சேலம், தர்மபுரி** மற்றும் **ஈரோடு** மாவட்டங்களில் பெருமளவில் காணப்படுகிறது. அறுவடை காலங்களில் (அக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை) இலைகள்இ கிழங்கு தோல்இ திப்பி ஆகியவை குறைந்த விலையில் கிடைக்கின்றன. மரவள்ளி இலையில் புரதம் (20 %) கொழுப்பு (8 %) மற்றும் கால்சியம் (2 %) ஆகிய சத்துக்கள் செரிந்துள்ளன. அசைபோடும் விலங்குகளுக்கு 5 கிலோ வரை பசும் இலைகளையும் 3 கிலோ வரை உலர வைக்கப்பட்ட இலைகளையும் தீவனமாக பயன்படுத்தலாம். மரவள்ளி இலையில் உள்ள டேனின் நழுவும் புரதத்தின் அளவை கூட்டுவதால் கறவை மாடுகளுக்கு சிறந்த தீவனமாகும். உலர்த்தப்பட்ட மரவள்ளி கிழங்கு தோல் மற்றும் திப்பியில் எளிதில் செரிக்கக் கூடிய நார்ச்சத்து அதிகம் எனினும் புரதச்சத்து (4 - 6 %) குறைவாக உள்ளது. மேற்கண்ட தோல் மற்றும் திப்பி ஆகியவற்றை 5 முதல் 7 கிலோ வரை மாடுகளுக்கும் 1,2 முதல் 1 கிலோ வரை ஆடுகளுக்கும் கொடுக்கலாம். அறுவடை காலங்களில் மரவள்ளி கிழங்கு விலை பெருமளவு வீழ்ச்சி அடையும் போது அசைபோடும் விலங்குகளின் தீவனத்தில் பயன்படுத்தலாம்.
- மரவள்ளி கிழங்கில் எரிசக்தி (ஸ்டார்ச் 70 - 80 %) அதிகம் எனினும் புரதம் (3%), இன்றியமையாத அமினோ அமிலங்களான லைசின் மற்றும் மெத்தினின் மற்றும் நார்ச்சத்தின் அளவு (4%) குறைவு. ஆகையால் கோழிகள் தீவனத்தில் மரவள்ளி கிழங்கை தானியங்களுக்கு பதிலாக பயன்படுத்தும் போது தீவனத்தில் புண்ணாக்கு மற்றும் விலங்கு வகை புரத அளவை கூட்டி தேவையான அளவு அமினோ அமிலங்கள் கிடைப்பதை உறுதி செய்யவும். நாட்டுக்கோழிகளுக்கு தானியங்களுக்கு பதிலாக மரவள்ளி கிழங்கை பயன்படுத்தலாம்.

- *குறிப்பு:* பசும் மரவள்ளி இலை, பட்டை மற்றும் கிழங்கில் லினாமரின் என்ற நச்சுப்பொருள் உள்ளதால் இதை உண்ணும் கால்நடைகளில் ஹைட்ரோ சயனிக் அமில நச்சு ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகவே இவற்றை சூரிய ஒளியில் அல்லது சூரிய உலர் கலன்களில் உலர்த்தப்பட்ட பின்னரோ அல்லது குறைந்த அளவிலோ பயன்படுத்துவதன் மூலம் ஹைட்ரோ சைனிக் அமில நச்சின் பாதிப்பை குறைக்க முடியும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், ராணிபேட்டை, திருப்பத்துார், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வானம் தெளிவாக காணப்படும். பகல்நேர வெப்பநிலை 27°செ முதல் 30°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல 24°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 60-80 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40-60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரி காற்றின் வேகம் 08-14 கி.மீ ஆகவும் பெரும்பாலும் கிழக்கு வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரைகள்**

- நெல் வயல்களில் முறையான வடிகால் வசதியை மேம்படுத்தி வயல்களில் நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளவும். மேலும் பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பினை தவிர்க்கவும்.
- அறுவடை செய்த பயிர்களை நனையாமல் உயரமான இடங்களுக்கு மாற்றி தார்ப்பாய்களை கொண்டு மூடவும்.
- பழமரங்களில் காற்று புகும் வகையில் கிளைகளை வெட்டுதல் வேண்டும்.
- காற்றின் வேகம் அதிகமாக காணப்படலாம் என்பதனால் வாழை பயிர்களுக்கு மரகொம்புகளை கொண்டு முட்டு கொடுக்கவும்.
- பலத்த காற்று வீச தொடங்குவதற்கு முன் முதிர்ச்சி அடைந்த தேங்காய் மற்றும் இளநீர் காய்களை அறுவடை செய்ய வேண்டும். தலைப்பகுதியின் கீழ் பகுதியுள்ள அதிக எடையுள்ள ஓலைகளை வெட்டி அகற்ற வேண்டும் மற்றும் மரங்களில் அடி பகுதியில் மண்ணால் உயரமாக அணைக்க வேண்டும்.

**கால்நடை ஆலோசனைகள்**

- தீவன தொடடி மற்றும் தண்ணீர் தொட்டிகளை கிளோரின் டை ஒஸ்சிட் அல்லது பிளீச்சிங் பவுடர் கொண்டு சுத்தமாக கழுவி விட வேண்டும்.
- நீரில் நனைத்த வைக்கோல் அல்லது உலர்தீவனங்களை அப்புறப்படுத்த வேண்டும் அல்லது இயந்திர உலதிகளில் இட்டு காய வைக்க வேண்டும.
- பருவநிலை சீராகும் வரை கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பக்கூடாது.
- அடுத்த சில நாட்களுக்கு கால்நடைகளுக்கு தேவையான குடிநீரை வெப்பநிலைக்கு தகுந்தவாறு சூடாக்கி கொடுக்க வேண்டும்.
- கால்நடைகள் படுக்கும் இடங்களில் உலர்ந்த பொருட்களை பயன்படுத்தவும்.
- கன்று ஈனும் நிலையிலுள்ள கறவை மாடுக்கு / ஆடுகளை வசதியான உலர்வான இடத்தில் தங்க வைக்க வேண்டும்.
- இளம் கன்றுகள் / ஆட்டுக்குட்டிகள் இருக்கும் கொட்டகைகளில் தரையில் உலர்ந்த வைக்கோலை பரப்பி வைத்தால் குளிர் அழற்சிக்கு உள்ளாகாமல் பாதுகாக்கலாம்.
- மழைநீர் புகுந்த இடங்களில் இருக்கும் கால்நடைகளை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். இல்லையெனில் குளம்பு அழுகல் நோய் ஏற்படும்.
- நோய் தொற்றை தடுக்க பீனோல் / குர்டினிரி அம்மோனியம் தொகுகிகளை கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

- இறந்த கால்நடைகளை முறையாக புதைக்க வேண்டும், அதை ஆற்றிலோ, குளத்திலோ வீசி எறியக்கூடாது.
- நோய் தொற்றை தடுக்கும் அண்டி பையோட்டிக் மருந்துகள், திரவியங்கள் போன்றவற்றை இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**7. அதிக மழை பெறும் மண்டலம்**

எதிர் வரும் ஐந்து நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 28 - 31$^{0}$ செ ஆகவும், குறைந்த பட்ச வெப்ப நிலை 22 - 24 $^{0}$செ ஆகவும், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காலை நேர அதிகபட்ச வெப்பநிலை 60 – 80 % பதிவாக வாய்ப்புள்ளது. மதியம் நேர அதிகபட்ச வெப்பநிலை 40 - 50 % பதிவாக வாய்ப்புள்ளது. குாற்றின் வேகம் மணிக்கு 12 – 18 கி.மீ வேகத்தில் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

- தோட்டக்கலை பயிர்களான வாழை, மிளகு, கிராம்பு, ஜாதிக்காய், இலவங்கப்பட்டை மற்றும் தென்னை மரங்களுக்கு பாத்திகள் அமைத்து மக்கிய தென்னைநார் கழிவுகளை இடுவதன் மூலம் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்கலாம்.
- கிராம்பு மற்றும் இலவங்கபட்டை பயிர் செய்துள்ள நிலத்தில் ஈரப்பதம் வீணாகாமல் தடுக்க பண்ணை கழிவுகளை கொண்டு நிலப்போர்வை செய்வது நல்லது. கிராம்பில் மழை மிக குறைவாக இருப்பதால் மரங்களுக்கு நீர் பாய்ச்சவும்.
- அன்னாசி வயல்களில் மூடாக்கு இடுவதன் மூலம் மண் ஈரப்பதம் வீணாகாமல் தடுக்கலாம்.
- காய்க்கும் தென்னை மரங்களுக்கு **6** மாதங்களுக்கு ஒரு முறை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தென்னை டானிக் மரம் ஒன்றிற்கு **200** மில்லி வீதம் வேர்வழியாக அளிக்கவும்.
- வாழை மரங்களுக்கு காற்றின் வேகம் இருப்பதால் மூங்கில் அல்லது சவுக்கு குச்சிகள் கொண்டு முட்டு கொடுக்கவும்.

Sd/-

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.வே.ப.க., கோவை**